தமிழ்ச்சிட்டு

குரல் 25
இசை 3

மீனம் 2033
[மார்ச்சு - 2002]

விலை :
உரு.3.00



சிறுவர்
கலை
இலக்கியத்
திங்களிதழ்

உண்மை கடைப்பிடி! உழைப்பில் உறுதி கொள!

உன்னைச் சுற்றிலும்
உன்னைக் கெடுத்திடும்
உலகச் சூழல்கள்
ஒரு கோடி! — அவற்றில்
ஊன்றிடும் நினைவினை
உடனுடன் பிடுங்கியே
ஒளிர வேண்டும்,நீ
மெரு கோடி!

கண்ணைக் கெடுத்திடும்
காட்சிகள் ஆயிரம்!
காதைக் கெடுத்திடும்
உரைநூறு!—மனப்
புண்ணைக் குடைந்திடும்
புரைக ளாம்; அவை
போக்கைத் தடுத்து,நீ
கரை யேறு!

நாக்கைத் தடுத்துவை!
நரம்பை ஒடுக்கிவை!
நல்லவர் கையொடு
கைபிணை! — ஒரு
தீக்கைத் தொடர்புனைத்
தீயில் தள்ளலாம்!
தீமை செய் யாதிரு;
மெய் துணை!

உண்மை கடைப்பிடி!
உழைப்பில் உறுதிகொள்!
ஒரு நாள் வரும், உனைக்
கரை யேற்றும்! — மனத்
திண்மைக்(கு) அறந்துணை!
தேர்ந்து முடிவுகொள்!
திசையெலாம் பணிந்து;நின்
உரை யாற்றும்!

-1971

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலை இதழ்

குரல்–25 இசை–3

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தமிழ்ச்சிட்டு'
செந்தமிழ் அடுவகம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை 601 302.
தொலைபேசி எண் : 227 0231

மத உணர்வை உமிழ்வோம்!

குசராத்தில் நடந்து கொண்டிருக்கிற கொலைகளை எல்லாம் நீங்கள் பார்க்கிறீர்கள்தானே!

ஒருவரை ஒருவர் வெட்டிக் கொல்லுவதும், தீவைத்துக் கொளுத்துவதும் நடந்து கொண்டிருக்கின்றன.

கடைகளை உடைத்துத் திருடிக் கொண்டு ஓடுகின்றனர். கடைகளுக்கு வீடுகளுக்குத் தீ வைத்துவிட்டுக் கொக்கரிக்கின்றனர்.

இப்படியெல்லாம் ஒருவன் செய்தால் அவனுக்குப் பித்துப்(பைத்தியம்) பிடித்து விட்டது என்று தானே நாம் சொல்லுவோம்

பித்துப் பிடித்தவர்களாலும் வெறி பிடித்தவர்களாலும்தாம் இப்படி அறிவில்லாமல் செய்ய முடியும்.

யானைக்கு மதம் பிடித்துவிட்டால் எப்படி எல்லாவற்றையும் அழித்துவிடுமோ — அப்படி மாந்தனுக்கும் மதம் என்கிற சமயவெறி பிடித்து விட்டால் இப்படிப் பித்து பிடித்து அலைகிறார்கள்.

உலகில் பல்வேறு மதங்கள் உண்டு வழிபாடுகள் உண்டு. அவரவர்கள் வழிபடுகிற கடவுளுக்கு ஏற்ப மதங்களையும் உருவாக்கிக் கொண்டனர்

வாழ்க்கையில் நல்லது வேண்டும் அமைதிவேண்டும் என்பதற்காகக் கடவுளை வழிபடத் தொடங்கியவர்களுக்கு வெறியேறி அடித்துக்கொண்டு சாகிறார்கள்

மக்கள் அமைதியைக் குலைக்கிறவர்கள் தாம் வன்முறையாளர்கள்.

சூலம் வைத்துக்கொண்டும் கம்பு கடப்பாரை வைத்துக் கொண்டும் இன்னொரு மதத்தினர் வழிபாட்டு இடத்தை இடிப்பது கடவுள் பற்றில்லை.

மக்களிடையே அன்பு செலுத்துவதும், அனைவரையும் ஒன்று போல் மதிப்பதும்தான் உண்மையானது. மற்றவை எல்லாம் வெறி யுணர்வுகளே. பித்து (பைத்தியம்) பிடித்தவர்களின் ஆட்டமே வன்முறையின் தாண்டவம்.

எனவே, இளைஞர்கள் அமைதியான முறையில் ஒருவரை ஒருவரிடையே மத உணர்வு கொள்ளாமல், சாதி உணர்வுக்கு ஆட்படாமல் அன்பு செலுத்திடல் வேண்டும்.

சாதி, மத உணர்வு கொள்பவர்களை இழிவாக எண்ணவேண்டும். அத்தகைய உணர்வுகளை உமிழ வேண்டும்.

*



திமிங்கிலம், தால்ஃபின் போன்ற கடல்வாழ் விலங்குகள். ஆடு, மாடு, மாந்தன் போலான பாலூட்டி வளர்க்கும் வகையைச் சார்ந்தவை.

கடலில் நீந்தி வாழ்வதற்கு ஏற்றபடி கால்கள், கைகள் மறைந்துவிட்டன. வாலை மேலும் கீழும் உதைத்து நீந்துகின்றன. நிலத்தில் வாழ்ந்து வரும் விலங்கு எப்படிக் கடலுக்குப் போனது? ஏன் போனது? நிலத்தில் தாக்குப் பிடிக்க முடியாமல் நீருக்குப் போயிருக்கலாம்.

அண்மையில் திமிங்கிலங்களின்உடல் அணுக் கூறை மற்ற உயிரினங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், நீர் யானை, பன்றி ஆகியவற்றுடன் ஒத்துப் போனது தெரியவந்துள்ளது. பாக்கித்தானில் கிடைத்துள்ள 'பாசில்' எலும்புகள் இந்தச் சிக்கலுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. நீர் யானையின் கடல் நீர் உறவு முறைதான் திமிங்கிலம் என்பது உறுதியாக உள்ளது.

*

கூரியர்

உலகில் உள்ள முகமையான 30 மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கிற இதழ்தான் 'யுனெசுகோ கூரியர்'.

1948இல் ஆங்கிலத்தில் தொடங்கப்பட்ட இதழ் தமிழில் 1967 முதல் வெளிவருகிறது.

1967 முதல் இன்றைக்கு 35 ஆண்டுகளாக அதன் தமிழ் வெளியீட்டிற்கு ஆசிரியராக இருந்து வருபவர் திரு. மணவை முத்தபா அவர்கள்.

35 ஆண்டுகளின் வெளியீட்டில் இந்த இதழ் முப்பது மொழிகளில் நான்காம் தகுதியைப் பெற்றிருக்கிறது.

ஆங்கிலம், பிரஞ்சு, உருசியன் என்கிற மூன்று மொழிகளுக்கு அடுத்த நிலையில் நான்காம் நிலையில் தமிழில் வெளிவருகிற கூரியர் இடம்பெறுகிறது.

உலகப் பலகணி என்று அழைக்கப்படும் இந்த இதழ் உலக அளவிலான அறிவியல், வரலாற்றுச் செய்திகளை வெளியிட்டு வருகிறது.

'தமிழரின் வாழ்வும் பண்பாடும்' என்கிற தலைப்பிலான கட்டுரை உலக மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுக் 'கூரியரில்' வெளிவந்தது.

ஆனால், இந்த இதழ் இந்த மாதத்தோடு உலக அளவில் நிறுத்தப்படுகிறதாம்.

அறிவான இதழ்கள் இப்படி நிறுத்தப்படுவது நமக்கெல்லாம் பெரிய இழப்பே!



தொடர் வண்டிகள்

நிலவழிப் போக்குவரத்தை விரைவாகவும் சிக்கனமாகவும் நடத்துவதற்கு தொடர் வண்டிகள் உதவுகின்றன.

பொறி நீராவியாலோ, கன்னெயினாலோ இயங்கும். இத்தகைய தொடர்வண்டிப் பொறிகள் கண்டுபிடிக்கப் படுவதற்கு முன்பே தொடர் வண்டிப் பாதைகள் பயன்படுத்தப் பட்டன. 16ஆம் நூற்றாண்டில் நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளில் மரத்தாலான தண்டவாளங்களை அமைத்து, அவற்றின்மீது வண்டிகளை ஏற்றிக் குதிரைகளைக் கொண்டு அவற்றை இழுக்கச் செய்தார்கள். 1768இல் மரத்திற்குப் பகரமாக இரும்புத் தண்டவாளங்களைப் பயன்படுத்தினார்கள்.

நீராவி இழுவைப் பொறி கண்டுபிடிக்கப்பட்டதும், அதைக் கொண்டு தொடர் வண்டியை இழுக்கச் செய்ய முயன்றனர். தண்டவாளத்தில் இயங்கும் நீராவிப் பொறியை முதன்முதலில் இரிச்சர்டு திரெவிதிக்கு என்ற ஆங்கிலேயர் 1804இல்

அமைத்தார். இதை இசுட்டீவன்சன் என்னும் ஆங்கிலேயர் திருத்தியமைத்தார். அவர் 40 அயிரமாத்திரி நீளமுள்ள இருப்புப் பாதையை அமைத்து, 1825 செபுதம்பர் 27இல் தொடர்வண்டி ஒன்றைத் தாம் அமைத்த பொறியைக் கொண்டு ஓட்டிக் காட்டினார். அவர் அமைத்த தொடர்வண்டிப் பொறியின் அடிப்படையிலேயே இன்றைய நீராவித் தொடர்வண்டிப் பொறிகள் உருவாக்கப் படுகின்றன.

பெரிய நகரங்களிலும், போக்குவரத்து அதிகமாக உள்ள நகரங்களிலும் போக்குவரத்து நெருக்கடியை ஈடுகட்ட, நிலத்திற்கு அடியில் தொடர்வண்டிப் பாதை அமைக்கிறார்கள். இதைத் தரைவழித் தொடர்வண்டி என்பார்கள். மலைப் பகுதிகளில் உள்ள தொடர் வண்டிப் பாதைகளில் ஏறும் பொழுது சக்கரங்கள் வழுக்கி விடாமலிருக்கத் தண்டவாளங்களுக்கு இடையில் பற்களுடன்கூடிய மூன்றாவது தண்டவாளத்தை அமைக்கின்றனர். மேலும், மலை வண்டியில் அதிக எடை இல்லாத இழுவையைப் பயன்படுத்துகிறார்கள். மலை வண்டிப் பாதையில் இழுவை பின்பறமிருந்து வண்டியை மேல்நோக்கித் தள்ளும்.

ஆசியாக் கண்டத்திலேயே முதன்முதலாக 1853 ஏப்பிரல் 16இல் மும்பாயிலிருந்து 32 அயிரமாத்திரி தொலைவிலுள்ள தானாவுக்கு இருப்புப் பாதை அமைக்கப்பட்டது, அதன்பின் பல பகுதிகளிலும் தொடர்வண்டிப் பாதைகள் அமைந்தன. முதலில் ஆங்கிலேயருக்கு உரிமையான தனிப்பட்ட பல குழுமங்களே தொடர்வண்டிப் போக்குவரத்தை நடத்திவந்தன.

சித்தரஞ்சன் தொர்டர்வண்டி இழுவைத் தொழிற் சாலையில் எல்லா வகை நீராவி இழுவைகளும் மின்சார, கன்னெய் இழுவைகளும் அணியமாகின்றன. காசியிலுள்ள தொடர்வண்டி இழுவைத் தொழிற்சாலையில் கன்னெய் - மின்சார இழுவைகள் அணியமாகின்றன. தமிழ்நாட்டில் சென்னை பெரம்பூரிலுள்ள இணைப்புத் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலையில் பெட்டிகள் உருவாக்கப்படுகின்றன.

*

சப்பான்



ஆசியாக் கண்டத்தின் கிழக்கிலுள்ள நாடு சப்பான். இந்நாடு ஒரு தீவுக் கூட்டமாக உள்ளது. இதில் ஆக்கைடோ, ஆன்சூ, கியூசூ, சிக்கோக்கூ ஆகிய நான்கு பெரிய தீவுகளும், ஆயிரக்கணக்கான சிறிய தீவுகளும் உள்ளன. மேற்கே சப்பான், கடலும் கிழக்கே பசிபிக்குப் பெருங்கடலும் உள்ளன. மொத்தப் பரப்பு 3,72,113 சதுர அயிர மாத்திரி(கிலோ மீட்டர்). மக்கள் தொகை ஏறத்தாழ 11.76 கோடி (1981). தலைநகரம் தோக்கியோ.

சப்பான் ஒரு மலைப்பாங்கான நாடு. பூசியாமா இங்குள்ள மிக உயரமான மலையுச்சி. இது தவிர, மேலும் ஏறத்தாழ 30 எரிமலைகள் உள்ளன. எரிமலைகள் மிகுந்திருப்பதால் இந்நாட்டில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவது உண்டு. ஆயிரக்கணக்கான வெந்நீர் ஊற்றுகளும் இங்கு உள்ளன. ஏரிகள் பல உள்ளன.

சப்பானிய ஆறுகள் மிகச் சிறியவை. போக்குவரத்துக்கு இவை பயன்படுவதில்லை. எனினும் நீர்ப்பாசனத்திற்கும் மின்னாற்றல் உருவாக்கத்திற்கும் இவை உதவியாக இருக்கின்றன. மலைநாடாக இருப்பதால் இங்குச் சமவெளிகள் மிகக் குறைவு. இச் சமவெளிகளில் தாம் நாட்டு மக்கள் அனைவருக்கும் தேவைப்படும் உணவைப் பயிர்செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, வேதியல் உரங்களைப் பயன்படுத்தி மிகுநிலை வேளாண்மை முறையைக் கையாளுகின்றனர். இந்நாட்டின் முகாமை விளைபொருள் நெல். கோதுமை, பார்லி, பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு முதலியனவும் பயிரிடப்படுகின்றன. மலைப் பகுதிகளில் தேயிலை விளைகிறது. கடலிலிருந்து பலவகையான மீன்கள் கிடைக்கின்றன. மீன் பிடித்தல் மிக முகாமையான தொழில். முத்தும், பவளமும் சப்பானியக் கடலிலிருந்து கிடைக்கின்றன.

சப்பானில் கனிம வளம் குறைவு. எனினும் சிறந்த தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுள் ஒன்றாகச் சப்பான் விளங்குகிறது. இதற்குச் சப்பானிய மக்களின் உழைப்பும் முயற்சியுமே காரணம். கனிமப் பொருள்களை இறக்குமதி செய்து பலவகையான பொருள்களை உருவாக்குகின்றனர். வானொலி, தொலைக்காட்சி, புகைப்படக்கருவி, பீங்கான்,

மகிழுந்துகள் முதலியன உருவாக்குவதில் இந்நாடு முன்னணியிலிருக்கிறது. விசிறி, பொம்மை, விளையாட்டுக் கருவி, மட்பாண்டம் முதலிய கைவினைப் பொருள்களும் புகழ்பெற்றவை. தந்த வேலை, மரச்செதுக்குச் சிற்பம் முதலிய கலைகளில் சப்பானியர்கள் வல்லவர்கள். தொடர்வண்டிப் பொறி, மகிழுந்து, மிதிவண்டி மற்றும் பல்வகைப் பொறிகளும் இந்நாட்டின் ஏற்றுமதிகளில் தன்மையானவை. தொடர்வண்டிப் போக்குவரத்தும் இங்குச் சிறப்பாக முன்னேறியிருக்கிறது. மிக விரைவாகச் செல்லும் தொடர்வண்டிகள் பல இங்கு உள்ளன. இவற்றைப் போல வேகமாக ஓடும் தொடர்வண்டிகள் வேறு எந்நாட்டிலும் இல்லை. கப்பல் கட்டுவதில் உலகிலேயே சப்பான் முதலிடம் பெற்றிருக்கிறது.

சப்பானியர்கள் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். பெரும்பாலான மக்கள் இன்று நகரங்களில்தாம் வாழ்கின்றனர். சப்பானியர்கள் அழகு உணர்ச்சி உள்ளவர்கள். எளிமையாக வாழ்வதில் விருப்பம் கொண்டவர்கள். இவர்களுடைய இல்லம் எளிமையாகவும் தூய்மையாகவும், அழகாகவும் இருக்கும். எவ்வளவு சிறிய வீடாக இருந்தாலும் அதில் ஒரு சிறு மலர்த் தோட்டம் இருக்கும். பல பூக்களை வகைவகையாக அடுக்கும் கலையில் சப்பானியர்கள் கைதேர்ந்தவர்கள். 'இக்கேபானா' என அழைக்கப்படும் இக்கலை இப்போது உலகெங்கும் பரவி வருகிறது. சப்பானியர் தேநீர் வழங்கி விருந்தோம்பும் பண்பாடு புகழ்பெற்றது. இவ்வழக்கம் ஒரு தனிக் கலையாகவே போற்றி வளர்க்கப்படுகிறது. உடை அணிவதில் இங்கு மேல்நாட்டு முறை இப்போது பரவி வந்தாலும் 'கிமோனா' என்ற பண்டைக் கால ஆடைகளை இவர்கள் கைவிடவில்லை.

சப்பானிய மொழி, சீன மொழியைப் போல ஓவிய எழுத்து வடிவம் கொண்டது. இதைக் கற்பது எளிதில்லை. புத்த மதமும், இயற்கையைத் தெய்வமாக வழிபடும் சின்டோ மதமும் இந்நாட்டின் முக்கிய சமயங்கள். சப்பான் ஒரு முடியாட்சி நாடு. எனினும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட நாடாளுமன்றமே அதிகாரம் பெற்றது.

இரண்டாவது உலகப் போரின் போது தென்கிழக்கு ஆசியாவில் பல நாடுகளைச் சப்பான் வென்றது. ஆனால் கிரோசிமா, நாகசாகி என்ற இரு சப்பானிய நகரங்கள்மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசி அழித்தவுடன் சப்பான் தோல்வியுற்று அடிபணிந்தது. எனினும் சப்பானியர்கள் தங்கள் உழைப்பாலும் விடாமுயற்சியாலும் போரில் இழந்தவற்றை யெல்லாம் ஈடுசெய்து, இன்று தொழில் முன்னேற்றத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றனர்.

*

முதல் தேவை

கயல்விழியின் அப்பா கூலி வேலைசெய்யும் தொழிலாளி. தம் மகள் கயல்விழிமேல் மிகுந்த அன்பு வைத்திருந்தார். மகள் எதைக் கேட்டாலும் உடனே வாங்கித் தந்துவிடுவார்.

இவ்வாறாக இனிப்பு வகையில் தொடங்கி, பொம்மை, வளையல், நாடா, பாவாடைச் சட்டை, பெரிய நகை என்று வாங்கும்படி வளர்ந்தது. இதையெல்லாம் தம்மைவிட ஏழைமை நிலையில் உள்ள பள்ளிப் பிள்ளைகளிடம் காட்டிப் பெருமை அடித்துக் கொள்வாள். இதனால் போலிப் பெருமை அவளிடம் வளர்ந்தது. ஆனால், அவள் படிப்பில் அக்கறை செலுத்த வில்லை. தம் பிள்ளை படிப்பாள் என்று அப்பாவும் கவனிக்காது விட்டுவிட்டார்.

இவ்வாறே ஒருநாள், "அப்பா எனக்கு தொலைக் காட்சிப் பெட்டி வேண்டும். அடுத்த வீட்டிற்குச் சென்று நான் பார்க்க மாட்டேன்" என்றாள்.

கயல்விழியின் அப்பாவும் தன் மனைவியின் நகையை அடகு வைத்து, ஆயிரம் உருபா வாங்கி, முன்பணம் தந்து, கடன் தொகையில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வந்தார்.

கயல்விழி பறந்தாள்! அண்டை அயலார் வீடு ஒன்று விடாமல் சொல்லி வந்தாள். மறுநாள் பள்ளியில் படிக்கவே இல்லை. இதே பேச்சு, தொலைக்காட்சிப் புகழ் வளர்ந்தது.

தமிழ்ச்செல்வி நன்றாகப் படிக்கும் மாணவி! வறுமை நிலையிலும் கவனமாகப் படித்து முதல் மாணவியாகத் திகழ்ந்தாள். அம்மாவுடன் காலை மாலை இருவேளையும் வீட்டு வேலைக்குச் செல்வாள். இரவு வீட்டிற்கு வந்து படிப்பாள். காலையில் விரைவில் எழுந்து படிப்பாள்.

தமிழ்ச்செல்வியைக் கண்டாலே கயல்விழிக்குப் பிடிக்காது. தன் தந்தை தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி வந்ததை அவளிடம் கூறித் தொலைக்காட்சி

— இறை. பொற்கொடி —

பார்க்க வரும்படி அழைத்தாள் கயல்விழி.

தமிழ்ச்செல்வி, தன் நேரமின்மையைக் குறிப்பிட்டு, மேலும் தேர்வு நேரம். ஆதலால் படிக்க வேண்டும் என்று காரணம் கூறி மறுத்துவிட்டாள். மனம் பொறுக்காத கயல்விழி, "உனக்கு ஒன்றுமே வாங்கித் தரமாட்டாரா உன் அப்பா? ஒரு நல்ல பாவாடை சட்டைகூட உனக்கு இல்லையே! எங்கப்பா எதைக் கேட்டாலும் வாங்கித் தந்துவிடுவார்" என்றாள். கயல்விழி, தன் தந்தையைப் பற்றிக் குறைவாகப் பேசுவதைப் பொறுத்துக் கொள்ள இயலாது.

"என் தந்தை, என்னை நன்றாக படிக்க வேண்டும் என்றும், அப்படிப் படித்தால் என்னை மருத்துவராகப் படிக்க வைப்பதாகக் கூறி, வைப்பகத்தில் பணம் சேர்த்து வைக்கிறார். அதுவே எனக்குப் போதும். என் ஆசையும் இதுதான்" என்றும் கூறினாள்.

இவர்கள் பேச்சைக் கேட்டவாறே எழுதிக் கொண்டிருந்த ஆசிரியை, தமிழ்ச்செல்வியை அழைத்துப் பாராட்டினார். கயல்விழியிடம் அவள் அப்பாவை அழைத்து வரச் சொன்னார்.

அப்பாவை அழைத்து வந்தாள் கயல்விழி. ஆசிரியை, கயல்விழியின் அப்பாவிடம் நடந்ததைக் கூறி, "ஐயா! உங்கள் பெண்ணுக்கு எது முதல் தேவை என்பதை உணர்ந்து, அவற்றை வாங்கித் தர வேண்டும். நம் உழைப்பைப் பிள்ளைகள் மதித்து, அதன்வழிச் சேர்க்கும் பொருள்களின் தேவையையும் பயன்களையும் உணர வேண்டும்.

தடையில்லாக் கல்வியும், தேவையான பொருளுமே பெருமை சேர்க்கும். போலிப் பெருமை ஏற்றத்தாழ்வை வளர்க்கும். கேட்பவை எல்லாவற்றையும் வாங்கித் தரக் கூடாது!" என்று கூறினாள்.

கயல்விழியின் தந்தையும் தம் தவற்றை உணர்ந்து, முதல் தேவையை எண்ணிப் பெருமூச்சு விட்டவாறே, "அம்மா! என் மகளின் எதிர்காலத் தேவையைக் கருதிக் கல்வியில் அக்கறை செலுத்தச் செய்வேன்!" என்று மனம் நெகிழ்ந்து கூறினார்.

இளமைக் கல்வியே வளமை சேர்க்கும்!

❑

சென்னர்

மாந்தரைப் பீடிக்கும் கொடிய தொற்றுநோய்களில் ஒன்று அம்மை. இது வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவர் எட்வர்டு சென்னர்.

இங்கிலாந்தில் கிளசுடர்சயரிலுள்ள ஒரு சிற்றூரில் சென்னர் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு மதகுரு. பள்ளிப் படிப்பு முடிந்ததும் சென்னர் மருத்துவக் கல்வி பயின்று பட்டம் பெற்றார். அக் காலத்தில் இலண்டனில் தலைசிறந்த மருத்துவராக விளங்கிய சான் அன்டர் என்பவரிடம் சென்னர் சில ஆண்டுகள் பயிற்சி பெற்றார். அவரைத் தம் ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டியாகவும், ஆருயிர் நண்பராகவும் கொண்டார்.

அக்காலத்தில் உலகமெங்கும் அம்மை நோயினால் ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்தார்கள். இந்நோய் கண்டு பிழைத்தவர்களும் அம்மைத் தழும்புகளினால் தம் அழகை இழந்தார்கள். இந்நோய் பரவுவதற்கான காரணம் யாருக்கும் தெரியாமலே இருந்தது. சென்னர் வாழ்ந்த ஊரில், மாடு வளர்க்கும் மக்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு மாடுகளின் மூலமாக மாட்டம்மை என்ற நோய் அடிக்கடி வந்தது. ஆனால், அந்நோய் எளிதில் குணமாகிவிடும்; உடலில் வடுக்களை உண்டாக்கவுமில்லை. இந்த நோய் ஒருமுறை கண்டவர்களுக்குப் பெரியம்மை வராது என அவ்வூர் மக்கள் நம்பி வந்தனர். சென்னர் நன்கு ஆராய்ந்து இது உண்மை தான் எனக் கண்டார். இதனை 1796 மே 14இல் ஒரு ஆய்வின் மூலம் மெய்ப்பித்தார். மாட்டம்மை கண்டிருந்த ஒரு பால்காரப் பெண்ணின் அம்மைப் புண்ணிலிருந்து பாலை எடுத்தார். நல்ல உடல் நிலையுடனிருந்த எட்டு அகவைச் சிறுவனுக்கு அந்தப் பாலைக் கொண்டு அம்மை குத்தினார். இரண்டு மாதங்கள் கழித்து, அவனுக்குப் பெரியம்மைப் பாலை எடுத்து அம்மை குத்தினார். ஆனால் அவனுக்குப் பெரியம்மை உண்டாக வில்லை. இதிலிருந்து, பெரியம்மையும் மாட்டம்மையும் நெருங்கிய உறவுடையவை; ஒரு முறை மாட்டம்மை கண்டவர்களின் உடலுக்கு மீண்டும் எவ்வகையான அம்மை நோயும் வராதபடி 'எதிர்ப்பு ஆற்றல்' உண்டாகி விடுகிறது; எனவேதான் மாட்டம்மை கண்டவர்களுக்குப் பெரியம்மை வார்ப்பதில்லை என சென்னர் விளக்கினார்.

சென்னரின் இந்த முறையை மற்ற மருத்துவர்களும்

பின்பற்றினார்கள். விரைவில் உலகெங்கும் இம்முறை பரவியது. ஆங்கில அரசின் நாடாளுமன்றம் இவருக்கு விருதும் பணமும் வழங்கியது; உருசிய அரசரும், பிரெஞ்சு மன்னர் நெப்போலியனும் இவரைச் சிறப்பித்துப் பரிசளித்தனர். இவர் பெரும்புகழ் பெற்றார் எனினும், இவர் தம்முடைய சிற்றூரிலேயே இருந்து கொண்டு சிற்றூர்ப்புற மக்களுக்குத் தொண்டு செய்து வந்தார்.

மருத்துவத் துறையில் மட்டுமன்றி இசையிலும் சென்னர் ஈடுபாடு உடையவர். இவர் நன்றாகப் பாடுவார்; பாடல் இயற்றுவார். பறவைகளைப் பற்றியும் இவர் ஆராய்ந்து வந்தார். அமைதியான வாழ்க்கை நடத்திவந்த இவர் 1823இல் காலமானார்.

தமிழ்ச்சிட்டைப் படிப்பாய்

சிட்டுக் குருவி ஒன்றைமுத்து
சிறைப் படுத்தி வைத்திருந்தான்
தொட்டுப் பார்த்த சிறகதனில்
தொடர்ந்து நடுக்கம் தென்படவே
முட்டிய கண்ணீர்த் துளிகளையே
முத்தாய் உதிர்த்தான் விழிகளிடை
பட்டு வேட்டி ஆசானும்
பக்கம் வந்து தோள்தொட்டார்.

இந்தச் சிட்டை விட்டுவிடு
இதோ இனிய தமிழ்ச்சிட்டு
சந்தப் பாக்கள் கற்பதற்கே
சொந்த மாக்கிக் கொள்ளலாமே
வியப்பு மிக்க அறிவியலின்
வெற்றிச் செயல்கள் பலவற்றைத்
தந்தை தாய்முன் னேநீயும்
தயக்க மின்றிப் படித்திடலாம்.

விடுக தைகள் மட்டுமின்றி
விருப்ப மான புதிர்ப்போட்டி
க்டுமு ழைப்பால் உருவான
கட்டுரைகள் பலவுண்டு
இடைமி டையே நகைச்சுவையும்
இருக்கும் இன்பத் தமிழ்ச்சிட்டில்
தடைக ளின்றித் தமிழ்ச்சிட்டைத்
தருவிப் பாயே தமிழ்மகனே!

—தி.ப. சண்முகம்,

போக்கிரி

— அழகுஒளி

ஏய்! இந்தப் பகுதியில் என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா?

தெரியாதுங்க...

நான் தான் வெள்ளையன். இந்தப் பகுதிக்குப் போக்கிரி. இப்ப நீ எனக்கு வழக்கத் தொகைத் தரவேண்டும்.

ஐயா, எனக்கு வணிகம் கொஞ்சம்தான் முன்னேறியுள்ளது. உங்களுக்கு வழக்கத் தொகை தருமளவுக்கு என்னிடம் பணம் இல்லை.

இதோ பார் இந்தத் துமுக்கிக்கு வேலை கொடுக்க நினைக்கிறாயா?

ஐயா, இந்தாங்க... இப்போதைக்கு இந்த ஐநூறு உருவாயை வைத்துக் கொள்ளுங்கள்.

இதோபார் நீ மாதம் ஆயிரம் உருவா தரவேண்டும். இல்லையானால் உன் கை ஒன்று காணாமல் போகும்.

அவனை முறைத்துக் கொண்டாலோ, அல்லது பகைத்துக் கொண்டாலோ அந்தப் பகுதியில் வணிகம் செய்ய முடியாது என்பது கார்வண்ணனுக்குத் தெரியும். இருந்தாலும் வெள்ளையனின் போக்கிரித்தனம் செயல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது.

இந்த முறை எப்படியாவது இவனின் போக்கிரித்தனத்தை அடக்கிவிட வேண்டும். காவல் நிலையத்திலும் அவனுக்கு ஆதரவு உண்டு என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதானே.

கார்வண்ணன் சிந்தனையில் ஆழ்ந்தார். அப் பகுதியில் அவருக்கு மட்டும் வெள்ளையனால் சிக்கல் இல்லை. அந்தப் பகுதியில் உள்ள எல்லா வணிகர்களுக்கும் சிக்கல்தான்.

வணிகர்களுக்கு மட்டுமல்ல. அந்தப் பகுதியில் வதிந்துவரும் மக்களுக்கும்தான். அந்தப் பகுதியில் யார் ஒருவர் சொத்து வாங்கினாலும் வெள்ளையனுக்கு வழக்கத் தொகை தந்துவிட்டுத் தான் அதைத் துய்க்க முடியும்.

"இந்தப் பகுதியில் அவனால் வீழ்ச்சியுற்றவர்களை ஒன்றுகூட்டி இந்தச் சிக்கலுக்குத் தீர்வு கண்டால் என்ன?" கார்வண்ணன் சிந்தித்தார்.

அங்கு வெள்ளையனால் வீழ்ச்சியுற்ற மக்களில் சிலரை ஒன்று கூட்டினார். ஒரு கமுக்கக் கூட்டத்தைக் கூட்டி இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முயன்றார்.

அவர் வீட்டிலேயே இந்தக் கூட்டம் நடந்தது. அங்கு வந்த செங்கன், தங்கன், பேரறிவன் போன்றோர் அதில் முகாமை யானவர்களாகச் செயல்பட்டார்கள்.

இந்தப் பகுதியில் நமக்கு அடிக்கடி தொல்லைகள் பெருகிக் கொண்டே போகின்றன. வெள்ளையனின் கொட்டத்தை அடக்கவேண்டும். அதற்காகத்தான் நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

இந்த வெள்ளையனுக்கு ஒரு முடிவு கட்டவேண்டும். அவனுக்குக் காவல் நிலையத்தில் சாய்கால் இருக்கிறது. காவல் நிலையத்தில் அவன்மீது முறையீடு கொடுத்தால்கூட நடவடிக்கை எடுப்பதில்லை. அவன் மட்டுமல்லன்; அவனைப் போல் தமிழகம் முழுவதுமே போக்கிரிகள் பெருகிவிட்டனர். இதை நாம் நாடு முழுக்க ஒரு இயக்கமாக எடுத்துச்செல்ல வேண்டும். போக்கிரிகளை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டும்" என்று உணர்ச்சிமயமாகச் சொன்னான் செங்கன்.

கார்வண்ணன் அவனை நோக்கி, "நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் இது நாடுமுழுக்க ஒரு இயக்கமாக எடுத்துச் செல்வது என்பது முடியாத செயலாகும். நாம் போக்கிரியை வீழ்த்தினால்கூட அவர்கள் உருவாகிவிடுவார்கள். போக்கிரிகள் உருவாகிறார்கள் என்பதைவிட உருவாக்கப் படுகிறார்கள் என்பதே உண்மை" என்றார்.

இப்போது நாம் அவனைக் கொலை செய்வதுதான் நமக்கு எல்லாம் ஒரு விடிவாக இருக்க முடியும். அப்போதுதான் நாமும் நம்பகுதி மக்களும் அமைதியாக வாழ்க்கையை நகர்த்த முடியும் என்றான் தங்கன்.

கொலை என்பதே ஒரு முடிவாகிவிடக் கூடாது. அவன் திருந்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று அமைதிப் படுத்தினார் கார்வண்ணன்.

நமக்குப் போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்பதை முதலில்

நாம் உணர வேண்டும். என்னதான் நாம் போராடினாலும் மக்கள் யாரும் உதவிக்கு வரமாட்டார்கள். எந்தப் போராட்டமும் மக்கள் ஆதரவு இல்லாமல் இருந்தால் அது வெற்றி பெறாது. ஆகவே இது தமிழக அளவில் ஒரு இயக்கமாக எடுத்துச் செல்வது என்பது தோல்வியைத் தான் தழுவும். அதே நேரத்தில் இந்தப் பகுதியில் போக்கிரியின் துன்புறுத்தலால் நம் மக்களுக்கு நேரடியாகவே தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே வெள்ளையனைக் கொலை செய்வதே சிறப்பாகும். இது மற்றவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கட்டுமே. இந்தப் பகுதியைப் பொறுத்தவரை அவனுக்கு எதிரான இந்தச் செயல் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தான் தருமே தவிர துன்பத்தைத் தராது என்றான் பேரறிவன்.

இந்தக் கருத்தையே மூவரும் ஏற்றுக் கொண்டனர். கார்வண்ணனுக்கும் இது சரியென்றே பட்டது.

காரி(சனி)யின் நிலவுகள்



காரிக் கோளுக்கு மேலும் பல நிலவுகள் இருப்பது இப்போது தெரிய வந்துள்ளது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 12 புதிய நிலவுகள் ஒவ்வொன்றும் பத்து — பதினைந்து அயிரமாத்திரி(கி.மீ.) அகலம்தான் இருக்கின்றன. இவை கொத்துக் கொத்தாகவும் காரியை கோணல்மானலாகவும் சுற்றி வருகின்றன. ஆக மொத்தம் இப்போது காரியின் நிலவுகளின் எண்ணிக்கை 30 இவற்றில் 4 தான் மிகப்பெரியவை.

மக்கள் தொகை !...

உலகில் இன்று மக்கள் தொகை ஏறத்தாழ 600 கோடி! இன்னும் 50 ஆண்டுகளில் உலகின் மக்கள் தொகை 1100 கோடி என்கிற அளவுக்குப் பெருகும். ஆனால் அறிஞர்களின் கருத்துப்படி உலகம் அதிக அளவாக 1200 கோடி மக்களைத்தாம் தாக்குப்பிடிக்கும். இந்த மக்கள் தொகைப் பெருக்கம் வேறு எந்த நாட்டிலும் நடக்கப் போவதில்லை. இந்தியா, சீனா, பாகித்தான், வங்காளதேசம் மற்றும் ஆப்பிரிக்காவிலும்தான் இந்த வியப்பு நடைபெறும். மக்கள் தொகையில் இந்தியா முதலிடம் பிடிக்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. அதுவும் வட இந்திய மாநிலங்கள்தாம் அடங்காத மக்கள் தொகையை அதிகமாக்குகின்றது.

யானை ஒரே பொழுதில் 70 பதினம் (லிட்டர்) தண்ணீர் குடிக்குமாம்.



தேனீக்கள் மணிக்கு 65 அயிர மாத்திரி(கிலோ மீட்டர்) வேகத்தில் பறக்கும்.

மாந்த அரத்தம் 5° பாகை வெப்பத்தில் 35 நாள்கள் கெடாமல் இருக்குமாம்.

ஒரு பறவையின் உடலில் அதிக எடை கொண்டது அதன் எலும்புகள் அல்ல; அதன் சிறகுகள்.

வெட்டுக்கிளியின் அரத்தம் வெள்ளையாக இருக்கும்..

பூனைகள் வெயில் காய்தல்

எந்தப் பாலூட்டியும் வெயில் இல்லாமல் சரியாக வளர முடியாது என்பது எல்லாருக்கும் நன்கு தெரிந்ததே. அப்படியானால் இருண்ட குகைகளில் வாழ்பவையும் பொழுது சாய்ந்த பிறகே வெளி வருபவையும் ஆன விலங்குகள் தங்கள் குட்டிகளை எப்படி வளர்க்கின்றன? இவற்றின் தரைக்கீழ் உறைவிடங்களில் பலகணிகளும் கிடையா. குட்டிகளுக்கும் மற்ற எந்த விலங்குக் குட்டியையும் போலவே வெயில் தேவை. இது எப்படி முடிகிறது?

விலங்குக் காட்சிச் சாலையின் இளம் உயிரியலார் வட்டம் இதை அறிய ஆவல் கொண்டது. ஒரு பூனைக் குடும்பத்தின் வளைகளின் அருகே இரவும் பகலும் இடைவிடாமல் கண்காணிப்பு நடத்த இந்தக் குழுவைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் கண்டறிந்தது இதுதான்:

வெயில் அடிக்கும் காலைகளில் பூனைத் தாய் தன் குட்டிகளை வெயில் காய வெளியே கொண்டுவந்தது. ஒவ்வொன்றாக எச்சரிக்கை யாகப் பற்களால் கவ்வித் தூக்கி வந்து வெயில் அடிக்கும் திறப்பில் கொண்டு விட்டது. அவற்றை நேரே வெயில் படும்படி விடாமல் ஏதேனும் மரம் அல்லது புதரின் அரை நிழலிலேயே எப்போதும் கிடத்தியது.

அளவுக்கு மிஞ்சுவது எதிலுமே கூடாது. வெயில் காய்வதிலோ, அது சிறப்பாகக் கூடாது. போதிய அளவு வெயில் காய்ந்தாகிவிட்டது என்று குட்டிகள் குரல் கிளப்பியதுமே தாய் அவற்றை விரைவாக வளைக்கு எடுத்துப் போய் விட்டது. சில வேளைகளில் விரைவு விரைவாக இரண்டு குட்டிகளை ஒரே பொழுது தூக்கிச் சென்றது.

இந்த விரைவு முற்றிலும் சரியே. ஏனென்றால் இருட்டுக்குப் பழகிப்போன விலங்குக் குட்டிகள் அடிக்கடி வெயிலின் கடுமையான தாக்குக்கு இலக்காகிவிடும். சான்றாக எங்கள் விலங்குக் காட்சிச் சாலையில் இரண்டு புலிக் குட்டிகள் கூண்டிலிருந்து முதல் தடவை வெயிலில் எடுத்துப் போகப்பட்டபோது வெயில் தாக்கி இறந்துவிட்டன. ஒரு குரங்கு, ஆப்பிரிக்க விரியன் இரண்டும் இதே சூழலுக்கு உள்ளாயின. குளிர்காலம் முழுவதையும் வெயிலற்ற இருப்பிடத்தில் கழித்த மிகப் பெரிய பல்லியும் இவ்வாறே இறந்தது.

வெயில் எல்லா விலங்குகளுக்கும் உயிர் வாழ இன்றியமையாதது. ஆனால் மிக அதிக அளவுகளில் அது தொல்லையானது. அதற்குப் பழக வேண்டும். மறைக்கப்படாத தோல் பகுதிகள் படிப்படியாக வெயிலில் காய வேண்டும். வெள்ளைத் தோலில் வெயிலால் ஏறும் பழுப்பு நிறம் ஒரு வகை வண்ண வடிகட்டி. புறவூதாக் கதிர்கள் உட்பட ஒளிக்கதிர்களை இது உரிய அளவு மட்டுமே உட்புக விடுகிறது.

குட்டிகள் தங்கள் உயிருக்கோ உடல் நலத்துக்கோ கேடு விளையாத அளவு வெயில் காயும்படி பூனைத் தாய் கவனித்துக் கொள்ளுகிறது. அதன் நடத்தை இயற்கைத் தேர்வினால் உருவாக்கப் பட்டிருக்கிறது. தங்கள் சுற்றுச் சூழலுக்கு ஏற்பத் தகவமைப்பு பெற்றவையே இயற்கைத் தேர்வில் எஞ்சிப் பிழைத்தன.

தேவ நேயர் வழியினிலே......

மணந்து சிறப்போம் வாழ்வம்மா!
மக்கள் வெறுப்பது தாழ்வம்மா!
இணக்கமாக ஒன்றி ணைந்து
இன்னலை விரட்டணும் நாமம்மா!

சாதி பார்த்தல் இழிவம்மா!
சமயம் கேட்டல் அழிவம்மா!
தேவ நேயர் வழியினிலே
தெளிவோம் தமிழர் மொழியம்மா!

— பட்டி சு. செங்குட்டுவன்

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2001
T.N. Cheif P.M.G 645/2001 தமிழ்ச்சிட்டு

கண்ணின் மணியே

படிப்பு

திருக்குறள் புலவர் நாவை. சிவம்

அன்பின் இனிய தமிழ்மலரே!
அருமைச் செல்வி அமிழ்தம்மா!
இன்பத் தமிழின் வளம்யாவும்
இனிதே பெறுக உளம் மேவ!

விடியு முன்பே துடித்தெழுக!
வீட்டுக் கடமை முடித்திடுக!
அடிவான் சுடரின் எழுச்சியைப்போல்
ஆற்றும் செயலால் வளர்ந்திடுக!

வீட்டின் பொருட்கள் எங்குளவோ
மீண்டும் வைப்பாய் அங்கினிதே
ஏட்டில் கூறும் தூய்மையெலாம்
இல்லம் எங்கும் தோயவிடு!

கண்ணின் மணிதான் படிப்பாகும்!
கவனம் வைப்பாய் பிடிப்பாகும்!
பெண்ணே நாட்டின் கண்ணாகும்!
பெருமை சேர்ப்பாய் பெண்மணியே!

பெருஞ்சித்திரனார் பேரப் பிள்ளைகள் நாம்

—பாவலர் இளஞ்சித்திரன்—

எங்கள் ஆசான் தமிழாசான்!
இனிய தென்மொழி இதழாசான்!
பொங்கும் அன்பில் குளிர்நிலவாம்!
போர்க்குணத் தினிலே அவர்புயலாம்!

பாவல ரேறவர் நம்பேறாம்!
பாட்டுல கில்நம் கைவாளாம்!
சேவலைப் போலவர் நிமிர்ந்தவராம்!
சிறுமைக் குணங்களை உமிழ்ந்தவராம்!

தமிழ்ச்சிட் டிதழை எங்களுக்காய்த்
தந்து மகிழ்ந்த தாத்தனவர்!
தமிழ்ச்சிட் டாக நாங்களுமே
தாவிப் பறக்க உதவியவர்!

தமிழ்நிலம் பார்நம் தாய்நாடு!
தமிழ்நா டதுதான் நம்வீடு!
தமிழினம் நம்மினம் என்றவராம்;
தமிழர் நாமென நின்றவராம்!

சாதியை எரித்த தவர்குடும்பம்;
தமிழரென் றுயர்ந்த தவர்குடும்பம்!
ஓதிய தெல்லாம் ஒற்றுமையாம்!
உலகில் நமக்கவர் நற்றுணையாம்!

பெருஞ்சித் திரனார் தாத்தாவின்
பெயரப் பிள்ளைகள் நாமெல்லாம்
அருஞ்சொல் அவர்சொல் படிநடப்போம்!
அட,நாம் தமிழர் எனநடப்போம்!

*